தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

# செய்தி மடல்

செய்தி 16 மடல் 5 மே – 2016 ₹1.00



## மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு இதயங்கனிந்த நல்வாழ்த்துகள்

மாண்புமிகு தமிழக முதல்வராக 23.05.2016 அன்று பதவியேற்றிருக்கும்

**செல்வி ஜெ ஜெயலலிதா**

அவர்களுக்குத் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் உளங்கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது

மாண்புமிகு **தமிழக முதலமைச்சர்** அவர்களை வணங்கி வாழ்த்துகிறோம்!

## தமிழகத்தில் கால்நடை மருத்துவக் கல்வியை சர்வதேச தரத்திற்கு உயர்த்திட்ட சாதனைப் பட்டியல்

- ஒரத்தநாடு (தஞ்சாவூர்) மற்றும் திருநெல்வேலியில் இரண்டு புதிய கால்நடை மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மண்டல கால்நடை நோய் ஆய்வுக் கூடங்கள் அமைத்தல்
- இந்தியாவிலேயே முதன் முறையாக ஒசூரில் பன்னாட்டுத் தரத்திற்கு இணையாக கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி அமைத்து, இளங்கலைப் பட்டப்படிப்பு அறிமுகம்
- கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, விழுப்புரம், பெரம்பலூர், இராமநாதபுரம் மற்றும் நாகப்பட்டினத்தில் புதிய கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள்
- திண்டுக்கல், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தேனி, இராஜபாளையம் மற்றும் திருவாரூர் மாவட்டப் பல்கலைக்கழக மையங்களுக்கு நிதி ஒதுக்கி, புதிய கட்டடங்கள் திறப்பு
- கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கும் வகையில்
- 15 திறன்மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் 10 சுய வேலைவாய்ப்புப் பயிற்சிகள்
- முதுநிலைக் கல்விக்கான தகுதிசார் கல்வி உதவித்தொகை மற்றும் உள்ளிருப்புப் பயிற்சிக்கால நிதியுதவி அதிகரிப்பு
- ஒரத்தநாட்டில் மண்டலப் பால்பண்ணைத் தொழில்முனைவோர் வசதி மற்றும் கால்நடைத் தீவனப் பதப்படுத்தும் பிரிவு
- இந்தியாவிலேயே முதன் முறையாகச் சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் “ஸ்டெம்செல் ஆய்வு மையம்” மற்றும் “நானோ தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம்” உருவாக்கம்
- ஈரோட்டில் பர்கூர் மாட்டின ஆராய்ச்சி நிலையம் உருவாக்கம்
- கால்நடைகளுக்கான உயிரியில் பாதுகாப்பு ஆய்வகம் உருவாக்கம்
- மதுரையில் கால்நடை மருத்துவ பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் பரிசோதனை மையம் அமைப்பு
- வேலூர் மற்றும் விழுப்புரத்தில் மேய்க்கால் புறம்போக்கு நிலங்களில் பசுந்தீவனம் உற்பத்தித் திட்டம்
- நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள் மூலம் கால்நடைகளுக்கான அவசரச் சிகிச்சை சிறப்பு நலத்திட்டம்

### உலகக் கால்நடை மருத்துவ தினம்

உலகக் கால்நடை மருத்துவ தினம், “ஒருங்கிணைந்த ஆரோக்கியத்தை முன்னிறுத்திய தொடர் கல்வி” என்ற நோக்கத்தில் கால்நடை மருத்துவர்கள் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளால் கொண்டாடப்பட்டது. பல்வேறு கால்நடை மருத்துவச் சங்கங்கள் ஒன்றாக இணைந்து கால்நடை மருத்துவர்கள் என்ற ஒரே குடையின்கீழ் “நேர்மை–கண்ணியம்–தன்முனைப்பு” என்ற குறிக்கோளுடன் கால்நடை மருத்துவ தினத்தை 30.04.2016 அன்று



ஏற்காட்டில் கொண்டாடின. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, குத்து விளக்கேற்றி நிகழ்ச்சியைத் துவக்கிவைத்து உரையாற்றினார். அவர் தமது உரையில் மனிதன், விலங்குகள் மற்றும் சுற்றுச்சூழலின் அனைத்து நலனிலும் ஒருங்கிணைந்த கூட்டுமுயற்சிகள் மற்றும் தொடர்புகளுக்கு உலகு தழுவிய வழிமுறை ஒருங்கிணைந்த ஆரோக்கியம் என்பதை வலியுறுத்திக் கால்நடை மருத்துவர்கள் தொழில் தர்மம் மற்றும் கண்ணியத்தைக் கடைப்பிடிக்கும்படி கேட்டுக்கொண்டார். நாமக்கல், செல்வம் குழுமத்தின் நிர்வாக இயக்குநர் மருத்துவர் பி. செல்வராஜ், பி.பி. தீவன குழுமத்தின் நிர்வாக இயக்குநர் மருத்துவர் பி. தமிழரசன், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் இல. குணசீலன், பல்கலைக்கழகத்தின் சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் ஆர். ஜெயபிரகாஷ், சென்னை, முதன்மை தணிக்கை இயக்குநர் மருத்துவர் கே.பி. ஆனந்த் ஐஏஎஸ் ஆகியோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். முன்னதாக, உலகக் கால்நடை மருத்துவ தினத்தின் ஆலோசனைக் குழுத் தலைவர் மருத்துவர் ருக்மாங்கதன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். அமைப்புச் செயலாளர் மருத்துவர் ஐ. பொன்னு பாண்டியன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

### அகில இந்தியக் கால்நடை மருத்துவக் குழு ஆய்வு



இந்தியாவில் செயல்படும் கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு அங்கீகாரம் வழங்கும் அகில இந்தியக் கால்நடை மருத்துவக் குழுவின் ஆய்வு, ஒரத்தநாடு மற்றும் திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களில் 25.04.2016 முதல் 27.04.2016 வரை நடைபெற்றது. இவ்விரு கல்லூரிகளிலும் உள்ள மாணவர்களுக்கான வசதிகள் உள்ளிட்ட பல்வேறு உள்கட்டமைப்பு வசதிகளை அகில இந்தியக் கால்நடை மருத்துவக் குழுமம்மூலம் அமைக்கப்பட்ட ஒவ்வொரு கல்லூரிக்கான தனித்த குழுவினர், பார்வையிட்டு ஆய்வுசெய்தனர். இவ்விரு கல்லூரிகளின் முதல்வர்கள் தங்கள் கல்லூரிகளில் உள்ள வசதிகளைக் குழுவினர்க்கு விளக்கிக்கூறினர். மேலும், ஆய்வுக்குழுவினர் மாணவர்களிடம் கல்வி வசதிகளைப் பற்றிக் கருத்துக் கேட்டனர். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர், பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் ஆகியோர் ஒவ்வொரு கல்லூரியிலும் அக்கல்லூரி சார்ந்த குழுவினரைச் சந்தித்துக் கல்லூரி குறித்து எடுத்துரைத்தனர்.

### பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பங்கேற்பு

பங்களாதேஷ், குல்சி, சிட்டகாங் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின்மூலம் “பல்லுயிரி நலத்தில் உலக மற்றும் தேசியக் கண்ணோட்டங்கள்” குறித்த 13ஆவது கால்நடை மருத்துவ அறிவியல் கருத்தரங்கு சிட்டகாங்கில் 02.04.2016அன்று நடைபெற்றது. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கருத்தரங்கின் துவக்க விழாவில் சிறப்பு விருந்தினராகப்




பங்கேற்று, “உணவுப் பாதுகாப்பு, ஒரே சுகாதாரம் மற்றும் கடல்சார்ந்த பொருளாதாரத்தை ஊக்குவித்தல்” என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். அவர் தம் உரையில் சுகாதாரமான உலகை உருவாக்குவதற்குக் கால்நடை மருத்துவர்கள், மனித மருத்துவர்கள், பொதுச் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் நல நிபுணர்கள் ஒன்றாகச் சேர்ந்து இணைந்துபணியாற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார். இந்தக் கருத்தரங்கில் பங்களாதேஷின் கல்வித் துறை அமைச்சர் திரு. நுருல் இஸ்லாம் நஹித், உணவு மற்றும் விவசாய அமைப்பின் குழுத் தலைவர் டாக்டர் எரிக் ப்ரூம், பங்களாதேஷ் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் கௌதம் புத்தா தாஸ், சுகாதாரச் சேவையின் நிர்வாக இயக்குநர் பேராசிரியர் முனைவர் மக்மூதூன் ரஹ்மான், ஒரே சுகாதாரத்தின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் முனைவர் நிதிஷ் டி டெப்நாத், நொகாலி அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் சார்புத் துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் முகமது அப்துல் ஹுசைன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர். மேலும், பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் சிட்டகாங் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்வது தொடர்பான கலந்துரையாடலில் பங்கேற்றார்.

### முக்கிய நிகழ்வுகள்

- உணவு அறிவியல் புலத்தின் 8ஆவது பாடத்திட்டக் குழுக் கூட்டம்: 06.04.2016
- ஐந்தாவது கால்நடை உற்பத்திக் குழுக்கூட்டம்: 13.04.2016
- பல்கலைக்கழக அதிகாரிகள் கூட்டம்: 29.04.2016

### வெற்றிபெறும் ஆராய்ச்சித் திட்டங்களை உருவாக்குதல் பயிற்சி

பல்கலைக்கழகமும், ஐதராபாத் தேசிய வேளாண் ஆராய்ச்சி மேலாண்மைக் கழகமும் இணைந்து “வெற்றிபெறும் ஆராய்ச்சித் திட்டங்களை உருவாக்குதல்” பயிற்சியை திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 20.04.2016முதல் 23.04.2016 வரை நடத்தின. பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன் அவர்கள் பயிற்சியைத் துவக்கிவைத்துத் துவக்கவுரை ஆற்றினார். ஐதராபாத், தேசிய வேளாண் ஆராய்ச்சி மேலாண்மைக் கழகத்தின் இயக்குநர் முனைவர் டி. ராமாராவ் அவர்கள் தலைமை வகித்தார். பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் ம. பாபு அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். பல்கலைக்கழகத்தின் தேர்வாணையர் முனைவர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் எம். திருநாவுக்கரசு அவர்கள் நன்றியுரை ஆற்றினார். பயிற்சியின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பங்கேற்று நிறைவுரை ஆற்றிப் பயிற்சியாளர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார். பல்கலைக்கழகப் பேராசிரியர் 25 பேர் பயிற்சியில் பங்கேற்றனர்.

### உள்ளிருப்புப் பயிற்சி

வங்காளதேசத்தின் குல்சியில் சிட்டகாங் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் 15 பெண்கள் உள்பட 59 மாணவர்களுக்கு உள்ளிருப்புப் பயிற்சி, நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 15.04.2016 முதல் 29.04.2016 வரை அளிக்கப்பட்டது. பயிற்சியின் ஒரு பகுதியாக, மாணவர்களுக்குக் கால்நடை மருத்துவச் சிகிச்சை கற்பிக்கும் வளாகத்தின் அனைத்துப் பிரிவுகளிலும், கல்லூரியின் பல்வேறு துறைகள் மற்றும் வேளாண் அறிவியல் மையம் ஆகியவற்றிலும் பயிற்சி அளிக்கப்பட்டது. 28.04.2016அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் தலைமை வகித்து, மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.

### பெற்றோர் ஆசிரியர் கூட்டம்



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் 2015–16ஆம் ஆண்டு இளநிலைப் பட்டப்படிப்பு சேர்க்கைப் பிரிவின் மாணவர்களின் பெற்றோர்களுடனான கலந்துரையாடல் கூட்டம் 28.04.2016 அன்று நடைபெற்றது. கூட்டத்திற்குத் தலைமை வகித்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள், மாணவர்களின் கல்வி மேம்பாட்டில் பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தின் முக்கியத்துவத்தை விளக்கமாக எடுத்துரைத்தார். கல்லூரி மற்றும் விடுதி குறித்த தங்களின் கருத்துக்களைப் பெற்றோர்கள் வெளிப்படுத்தினர். முன்னதாக கல்லூரி முதல்வர் முனைவர் முனைவர் சி. பாலச்சந்திரன் அவர்கள் வரவேற்புரையாற்றினார். பல்கலைக்கழகத்தின் சிசிச்சையியல் இயக்குநர் முனைவர் ஆர். ஜெயபிரகாஷ், அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் க. குமணன், மாணவர் சங்கத் துணைத் தலைவர், விடுதிக் காப்பாளர் மற்றும் துணைக் காப்பாளர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர் ஆலோசகர்கள் கூட்டத்தில் பங்கேற்றனர். மொத்தம் 31 மாணவர்களின் பெற்றோர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### ராகிங்கிற்கு எதிரான குழுக் கூட்டம்

பல்கலைக்கழக அளவில் ராகிங்கிற்கு எதிரான குழுக் கூட்டம், சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் 13.04.2016 அன்று நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்து, ராகிங்கைத் தடுப்பதற்கான பல்வேறு திட்டங்களையும் அதன் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார். பல்கலைக்கழக ஆராய்ச்சி இயக்குநர் மற்றும் ராகிங்கிற்கு எதிரான கண்காணிப்புக் குழுவின் தலைவர் முனைவர் ம. பாபு அவர்கள் ராகிங்கைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வழிமுறைகளை விளக்கிக் கூறினார். பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளின் முதல்வர்களும் தங்கள் கல்லூரிகளில் ராகிங்கைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைத்தனர்.

### புரிந்துணர்வு ஒப்பந்தம்

இந்திய அரசின் ஆயுஷ் அமைச்சகத்தின் மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்துடன் “விலங்கின மருத்துவத்தில் தாவரங்களின் பயன்பாடு” குறித்த ஆவணத் தயாரிப்பு மற்றும் “கால்நடைகளைத் தாக்கும் நோய்களுக்கான சித்த மருந்துகள்” குறித்த கருத்தரங்கு நடத்தப் பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம் 07.04.106 அன்று செய்துகொண்டது. மேலும், கால்நடை



மரபணுக் கோர்வை ஆராய்ச்சியில் இணைந்து செயல்பட்டு, கால்நடை மருத்துவத்தில் குறிப்பாக மடிவீக்க நோய்க்கு மரபணுக்கோர்வை அணுகுமுறையினை மேம்படுத்தும் ஆராய்ச்சி மேற்கொள்ள ஜீனோம் லைப் சயின்ஸ் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் முன்னிலையில் பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் தி.ஜெ. அரிகிருஷ்ணன் அவர்கள் மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் தலைமை இயக்குநர் முனைவர் ஆர்.எஸ். ராமசுவாமி மற்றும் ஜீனோம் லைப் சயின்ஸ் நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலர் திரு. வினோத் சங்கரன் ஆகியோருடன் தனித்தனிப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டார். துணைவேந்தர் அவர்கள் கால்நடை மருத்துவத்தில் சிகிச்சைக்கு முந்தைய, சிகிச்சை மற்றும் சிகிச்சைக்குப் பிந்தைய நிலைகளில் பாரம்பரிய இந்திய மருத்துவத்தின் பயன்களை ஆராயக் கால்நடை மருத்துவர்களுக்கு வேண்டுகோள் விடுத்து, நுண்ணுயிரியல், உயிர்த்தொழில் நுட்பவியல், உணவு அறிவியில், சிகிச்சையியல் மற்றும் உயிர்த்தகவலியல் வல்லுநர்கள் அடங்கிய ஆராய்ச்சிக் குழு மூலம் கால்நடைகளில் களஅளவில் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் மற்றும் ஜீனோம் லைப் சயின்ஸ் நிறுவனத்தின் அறிவியலாளர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

### பயிற்சி

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருத்துவச் சிகிச்சை வளாகத்தில் “மாடுகளில் களத்தில் நோய் கண்டறியும் தொழில்நுட்பங்கள்” என்ற பயிற்சியானது 04.04.2016 முதல் 09.04.2016 வரை நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் “தடுப்புசி மற்றும் தடுப்புசியியல்” என்ற தலைப்பில் விரிவுரை ஆற்றினார். விர்பேக் அனிமல் ஹெல்த் பிரைவேட் இந்தியா லிமிடெட் நிறுவனத்தில் பணியாற்றும் 17 கால்நடை மருத்துவர்கள் பயிற்சியில் பங்கேற்றனர்.

- தமிழ்நாட்டின் கிராமப் பகுதிகளில் கால்நடை நலனுக்கான நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திகள் குறித்த தேசியக் கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் “அசைபோடும் விலங்குகளில் கள அளவில் நவீன முறையில் மலட்டுத்தன்மை நீக்கம் மற்றும் அவசரச் சிகிச்சை மேலாண்மைப்” பயிற்சி சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின்



கால்நடைச் சிகிச்சைத் துறைகளில் 18.04.2016முதல் 27.04.2016 வரை நடத்தப்பட்டது. பயிற்சியில் கால்நடைப் பராமரிப்புத் துறையைச் சார்ந்த 22 மற்றும் 15 கால்நடை உதவி மருத்துவர்கள் பங்கேற்றனர்.

Posted on 28.05.2016 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 27.05.2016

Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17
Registration No.TN/TBM/32/2015-17

Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254
Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.
Printed and Published by
Dr. S.A. Asokan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. S.A. Asokan,** M.V.Sc., Ph.D., **Phone : 044-2432 0411**
**E-mail : dde@tanuvas.org.in**

## தொலைநிலைக் கல்வியின் நேரடிப் பயிற்சி வகுப்பு

பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி இயக்ககம்மூலம் “விலங்கு நலம் பேணல்” குறித்த தொலைநிலைக் கல்வியின் சான்றிதழ்ப் படிப்பிற்கான நேரடிப் பயிற்சி, 11.04.2016முதல் 13.04.106வரை சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை மருத்துவச் சிகிச்சைத் துறையில் நடத்தப்பட்டது. பயிற்சியாளர்கள் பிஞ்சாரபோல், ப்ளூ க்ராஸ் மற்றும் இந்திய விலங்கு நல வாரியத்தை 12.04.2016அன்று பார்வையிட்டனர். பயிற்சியில் 26 பேர் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

## நாட்டுநலப் பணித் திட்டப் பணிகள்

- ✶ சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் நாட்டுநலப் நலப் பணித் திட்டப் பிரிவுமூலம் சிறப்பு முகாம்–2016 திருவள்ளூவர் மாவட்டத்தின் சிவன்வயல், பந்திகாவனூர், நல்லான்காவனூர், வடத்தூர் மற்றும் தொட்டிக்கலை கிராமங்களில் 01.04.2016 முதல் 07.04.2016வரை நடத்தப்பட்டது. கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் முனைவர் டி. பாஸ்கரன் அவர்கள் முகாமைத் துவக்கிவைத்துப் பண்ணையாளர்களுக்குத் தாதுப்புக் கலவை பாக்கெட்டுகளை வழங்கினார். நிறைவு விழாவில் பல்கலைக்கழக நாட்டுநலப் பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சிசிலியா ஜோசப் அவர்கள் பங்கேற்றார்.
- ✶ ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் 12.04.2016அன்று தஞ்சாவூர் மாவட்ட நிர்வாகம் நடத்திய தேர்தல் விழிப்புணர்வு மனிதச் சங்கிலியில் கலந்து கொண்டனர். கல்லூரி முதல்வர் முனைவர் க.ந. செல்வக்குமார் அவர்கள் மனிதச் சங்கிலியைத் துவக்கி வைத்தார். நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர் வ.ரங்கநாதன்மற்றும்உதவிப்பேராசிரியர்முனைவர்பூ.புவராஜன் ஆகியோர் ஆகியோர் அணிவகுப்பில் மாணவர்களுடன் பங்கேற்றனர். 119 மாணவர்கள் அணிவகுப்பில் பங்கேற்றனர்.



- ✶ சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் 60 நாட்டுநலப் பணித் திட்ட மாணவர்கள், சவீதா மருத்துவக் கல்லூரி 07.04.2016அன்று நடத்திய இதயச் சுவாச மூட்டல் குறித்த பயிற்சியில் பங்கேற்றனர்.

## பணி ஓய்வு



பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் ம. பாபு அவர்கள் 30.04.2016அன்று பணி ஓய்வுபெற்றார். 05.04.1956இல் பிறந்த இவர், 36 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை ஊட்டச்சத்தியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் வி. பாலகிருஷ்ணன் அவர்கள் 30.04.2016அன்று பணி ஓய்வுபெற்றார். 22.04.1956இல் பிறந்த இவர், 32 ஆண்டும், 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சாந்திநல்லா, ஆடு இனவிருத்தி ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எம். ஐயு அவர்கள் 30.04.2016அன்று பணி ஓய்வுபெற்றார். 06.04.1956இல் பிறந்த இவர், 36 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநரகத்தின் நிர்வாக அலுவலர் திருமதி ஜெ. பூமா அவர்கள் 30.04.2016அன்று பணி ஓய்வுபெற்றார். 28.04.1958இல் பிறந்த இவர், 34 ஆண்டும், 05 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் அலுவலகத்தின் நிர்வாக அலுவலர் திரு. ஆர். பாலசுப்பிரமணி ராவ் அவர்கள் 30.04.2016அன்று பணி ஓய்வுபெற்றார். 06.04.1958இல் பிறந்த இவர், 33 ஆண்டும், 04 மாதமும் பணியாற்றியுள்ளார்.



பல்கலைக்கழகத்தின் பதிவாளர் அலுவலகத்தின் கண்காணிப்பாளர் திருமதி பி. கோட்டீஸ்வரி அவர்கள் 30.04.2016அன்று பணி ஓய்வுபெற்றார். 07.04.1958இல் பிறந்த இவர், 29 ஆண்டும், 04 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை நுண்ணுயிரியியல் துறையின் உடனாள் திரு. எம். கமலக்கண்ணன் அவர்கள் 30.04.2016அன்று பணி ஓய்வுபெற்றார். 20.04.1958இல் பிறந்த இவர், 35 ஆண்டும், 05 மாதமும் பணியாற்றியுள்ளார்.



சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் அலுலக உடனாள் திரு. ஜி. முனியன் அவர்கள் 30.04.2016அன்று பணி ஓய்வுபெற்றார். 09.04.1956இல் பிறந்த இவர், 22 ஆண்டும், 10 மாதமும் பணியாற்றியுள்ளார்.

## 2016–17ஆம் கல்வியாண்டிற்கான இளநிலைப் பட்டப்படிப்புகளுக்கான சேர்க்கை அறிவிப்பு

2016–17ஆம் கல்வியாண்டிற்கான கீழ்க்கண்ட இளநிலைப் பட்டப்படிப்புகளில் **(பிவிஎஸ்ஸி&ஏஎச், பிடெக் (உணவுத் தொழில்நுட்பம்), பிடெக் (கோழியின தொழில்நுட்பம்), மற்றும் பிடெக் (பால்வளத் தொழில்நுட்பம்)** சேர்க்கைக்குத் தமிழ்நாட்டைச் சார்ந்த மாணவர்களிடமிருந்து 20.05.2016 **காலை 10:00 மணி முதல் 10.06.2016 மாலை 06:00 மணி வரை இணையதளம் மூலமாக விண்ணப்பங்கள் [Online application]** வரவேற்கப்படுகின்றன. மேலும் விவரங்களைப் பல்கலைக்கழகத்தின் இணையதளத்தில் (www2.tanuvas.ac.in / www.tanuvas.ac.in) அறிந்து கொள்ளலாம்.